**செய்தி வெளியீடு எண்: 211** **நாள்: 26.03.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(26.3.2018)** கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில், பூச்சி அருங்காட்சியகத்தை திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை.

---

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பூச்சி அருங்காட்சியக திறப்பு விழா நிகழ்ச்சியிலே, தலைமையேற்று தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு.இரா. துரைக்கண்ணு அவர்களே,

காலத்தினுடைய அருமை கருதி எங்களுக்கு பேசுவதற்கு வழிவிட்டு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு.வேலுமணி அவர்களே,

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களே,

நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய வேளாண்மைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் அருமை நண்பர் மகேந்திரன் அவர்களே,

மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள்
திரு.அம்மன் கே. அர்ச்சுனன் அவர்களே,
திரு.பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்களே,
திரு.ஓ.கே. சின்னராஜ் அவர்களே,
திரு.வி.சி. ஆறுகுட்டி அவர்களே,
திரு.கனகராஜ் அவர்களே,
திரு.எட்டிமடை சண்முகம் அவர்களே,
திருமதி கஸ்தூரி வாசு அவர்களே,
திரு. முருகுமாறன் அவர்களே,

முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களே,
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

நிகழ்ச்சியிலே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கின்ற
மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு கே.சி.கருப்பண்ணன் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் பெருமக்களே,

மேடையிலே வீற்றிருக்கின்ற அரசு உயர் அலுவலர்களே,
வருகை தந்திருக்கின்ற மாணவச் செல்வங்களே,

பெரியோர்களே, தாய்மார்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
இறுதியாக நன்றியுரை ஆற்றவுள்ள பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தர் டாக்டர் கு. இராமசாமி அவர்களே,

வேளாண் பெருமக்களே,
பத்திரிகை மற்றும் ஊடக துறை நண்பர்களே,
உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தினை தெரிவித்து,

இந்த பூச்சி அருங்காட்சியகத்தை நான் Video Conferencing மூலமாக திறக்கலாம் என்று நினைத்தேன், இதன் சிறப்பு அம்சத்தை, நீங்கள் வேளாண் பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக வந்து, இந்த அருங்காட்சியகத்தை பார்க்க வேண்டும் என்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களும், உங்களுடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு. வேலுமணி அவர்களும், மரியாதைக்குரிய திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வேண்டுகோள் விடுத்தார்கள், நீங்கள் நேரடியாக வந்து பாருங்கள், அதனுடைய சிறப்பு அம்சங்கள் எந்த அளவிற்கு இருக்கும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள் என்று கோரிக்கை வைத்தார்கள்.

நானும் ஒரு விவசாயி என்ற காரணத்தினாலே, விவசாயத்தில் பூச்சிகள் எப்படியெல்லாம் தாக்குகின்றது, அந்த பூச்சிகளின் வகைப்பாடுகள் எல்லாம் எவ்வாறு இருக்கின்றன, என தத்ரூபமாக நீங்கள் நேரடியாக வந்து பார்த்தால் தெரிந்து கொள்ளலாம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இங்கே வந்து பார்க்கின்ற போது தான், உண்மையிலேயே, இன்றைக்கு தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியாவிலேயே எவ்வளவு பூச்சி வகைகள் இருக்கின்ற என்பதை எல்லாம் தெளிவாக இந்த அருங்காட்சியகத்தில் பார்த்தோம். சுமார் 75,000 பூச்சி வகைகள் இருப்பதாக இந்த அருங்காட்சியகத்திலே குறிப்பிட்டிருந்தார்கள். நான் ஒவ்வொன்றாக பார்த்துக் கொண்டே வந்தேன். இந்த 75,000 பூச்சி வகைகளில் உலகளவில் பார்க்கும் போது 6 சதவிகிதம் இருந்ததாக குறிப்பிட்டிருந்தார்கள். இந்த 75,000 பூச்சி வகைகளை இங்கு பார்த்து தான் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த அருங்காட்சியகத்தின் மூலமாகத் தான், எந்த பூச்சியால் மக்களுக்கு நன்மை கிடைக்கிறது, எந்த பூச்சியால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், எந்த பூச்சியினால் தீமை கிடைக்கிறது என்பதை இந்த அருங்காட்சியகத்திற்கு உள்ளே வருகின்ற

போதே நாம் பார்த்து தெரிந்து கொள்ளலாம். அந்த அளவிற்கு தத்ரூபமாக, இந்த அருங்காட்சியகத்தை அமைத்த அமைச்சர் அவர்களுக்கும், முதன்மை செயலாளர் அவர்களுக்கும், துணை வேந்தர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய பேராசிரியர்கள், முன்னாள் பேராசிரியர்கள், இந்த வேளாண் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்கள் அத்தனை பேருக்கும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பேசுவது எளிது, ஆனால் அதை செய்து காட்டுவது கடினம், ஆனால் கடினமான அந்த வேலையை தத்ரூபமாக அத்தனை பூச்சி வகைப்பாடுகளையும் ஒருங்கிணைத்து, அதை பார்ப்பதற்கு அழகாக இருக்கின்ற வகையிலே அதை நேர்த்தியாக, இந்த அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது உண்மையிலே பாராட்டுக்குரியது.

இங்கே நம்முடைய முதன்மைச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டார்கள், உலகளவில் 20 இடங்களில் மட்டுமே இத்தகைய அருங்காட்சியம் இருப்பதாக சொன்னார்கள். ஆனால் இந்த அளவிற்கு இருக்கிறதா என்றால் இல்லை. இந்தியா மட்டுமல்ல, உலகளவிலேயே தத்ரூபமாக அந்த பூச்சி வகைப்பாடுகளை, என்னென்ன விதத்திலே தீமை செய்கிறது, எப்படி அது உருவாகி, பெரிதாகி, அதன்மூலமாக எப்படி தீமை செய்கிறது, என்பதை எல்லாம் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதேபோல, அந்த பூச்சி வகைகளால் எப்படி எல்லாம் நன்மை கிடைக்கிறது என்பதையும் தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பூச்சி கடித்தால் நம்முடைய உடலில் என்ன நோய் ஏற்படும் என்பதையும் இந்த அருங்காட்சியகத்திலே தெளிவாக காட்டியிருக்கிறார்கள். இதை எல்லாம் நம்முடைய மாணவச் செல்வங்கள், இங்கே படிக்கின்ற மாணவர்கள் மட்டுமல்ல, வெளியிலே படிக்கின்ற மாணவர்களும் இதைப் பார்க்கின்ற போது, அவர்களது கல்வி அறிவு பெருகும். விஞ்ஞான வளர்ச்சி இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. இந்த விஞ்ஞான உலகத்திலே புதுப்புது வகையான பூச்சிகள், அந்த பூச்சிகளினால் ஏற்படும் தீமைகள் மற்றும் நன்மைகளை அறிந்து, இந்த அருங்காட்சியகத்தின் மூலமாக பயன்பெற முடியும்.

இன்றைக்கு விவசாயிகள் எவ்வளவு தான் பாடுபட்டு பயிரை வளர்த்தாலும், ஒருசில பூச்சிகளால் தீமை உண்டாகி அந்த பயிர் நாசமாகிறது. தண்டு பூச்சி, நான் விவசாயம் செய்து கொண்டு இருக்கிறேன், நன்றாக தெரியும். பயிர் வளரும்போது இடையிலே தண்டிலே புழு ஏறி அதை துண்டித்துவிடும். முற்றிய நிலையில் பயிர் பாதிப்படைந்து விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும். அதேபோல, பருத்திகளில் பார்த்தீர்களானால், விழுதுகள் வழியாக, தண்டு வழியாக அந்த பூச்சி போய் அந்த

தண்டில் இருக்கின்ற ஊண் எல்லாம் உறிஞ்சி, அதனால் தண்டு உடைந்து விழுந்து விடும். அதையெல்லாம் இங்கே தத்ரூபமாக வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்து விவசாயிகள், வேளாண் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தெரிந்து கொண்டு, எந்த மருந்துகளை அடித்தால் அந்த பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும் என்பதை எல்லாம் இங்கே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இந்த அருங்காட்சியகம் மக்களுக்கு பயனுள்ள அருங்காட்சியகம். இதனால், இன்றைக்கு வேளாண் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற மாணவர்கள் இந்த அருங்காட்சியகத்தின் மூலமாக தங்கள் அறிவை பெருக்கிக் கொள்ள, வளர்த்துக் கொள்ள ஏதுவாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகம் 5 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பூச்சிக்கென்றே அமைக்கப்பட்ட தனித்துவமான அருங்காட்சியகம் நம்முடைய கோவை பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்தது.

ஆசிய கண்டத்திலே, மேற்கு சீனாவிலே ஒரு மிகப்பெரிய பூச்சி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அருங்காட்சியகம் 6691 சதுர பரப்பில் கட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பெரும்பான்மையான மாநிலங்களில் பூச்சிக்கென அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இங்கே ஆய்வுக்கூடங்களை பொறுத்தவரையில் 12 கோடி ரூபாய் நிதியில் Insectoscope கருவி நிறுவப்பட்டுள்ளது. 6 கோடி ரூபாய் செலவில் நுண்ணுயிர் சிறப்பு ஆய்வு கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதோடு, அரசு கூட இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

இந்த அருங்காட்சியகத்தை அனைவரும் பார்ப்பது அவசியம். அதிலே, விவசாயிகள் அதிகமாக கலந்து கொண்டு பார்த்தால், உண்மையிலேயே விவசாய பெருமக்கள் அவர்கள் பயிரிடுகின்ற போது அவர்களது பயிர்களை தாக்குகின்ற பூச்சிகளை தெரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு அந்த பயிரை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த அருங்காட்சியகத்தை துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்பது ஒரு சிறந்த பல்கலைக்கழகம். நம்முடைய கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக இருக்கிறது. புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து, விவசாய பெருமக்களுடைய, வேளாண் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மையாக இந்த வேளாண் பல்கலைக்கழகம் அமைந்து இருக்கின்றது. அதை மேன்மேலும் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக, இங்கே படிக்கின்ற வேளாண்மை பல்கலைக்கழக மாணவர்கள் சிறப்படைய வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**